1978 மார்ச் 11]

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அதுபற்றி பரிசீலனை இல்லை.

(மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் முதல்வர் இருக்கையில் அமர்ந்திருந்தார்.)

**திரு. மு. அரங்கநாதன் :** தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை. சட்ட அமைச்சர் எப்போது முதலமைச்சர் ஆனார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி தங்களுக்கு ஏன அவ்வளவு அக்கறை? அமைச்சர் வரிசையில் ஏதாவது ஒரு இடத்தில் உட்காரலாம்.

THE HON. THIRU K. NARAYANASAMY MUDALIAR : I was having conversation with the Deputy Speaker. Therefore I happened to get situated there.

### ஒன்றிய ஜீப்புகளுக்கு டீஸல் இயந்திரங்கள்.

* 317 வினா—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஜீப் வாகனங்களுக்கு டீஸல் இயந்திரங்கள் அமைத்திடும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. உச்சி :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஜீப்களுக்கு பெட்ரோல் இந்த அளவுதான், அதாவது மாதம் 150 லிட்டர்தான் போட்டுக்கொள்ள வேண்டுமென்று விதி இருப்பதால், அந்த ஜீப்களுக்கு டீஸல் எஞ்சின் பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா? குறிப்பாக மலைப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இப்போது இருக்கின்ற ஜீப்களுக்கு டீஸல் இயந்திரங்கள் பொருத்தும் திட்டம் இல்லை.

(முற்பகல் 9-30)

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, இன்று பெட்ரோல் விலை மிக அதிகமாக கூடிவிட்ட காரணத்தால் பெட்ரோல் இவ்வளவு தான் தரப்படும் என்று பி. டி. ஓ.-வுக்கு உத்தரவிட்டுவிட்டார்கள். இவ்வாறு குறைந்த அளவு பெட்ரோல் சப்ளை செய்கின்ற காரணத்தால் அவர்கள் அங்கு இருக்கக்கூடிய பள்ளி போன்ற ஸ்தாபனங்களுக்குச் சென்று சூப்பர்வைஸ் செய்ய முடியவில்லை. அதன் விளைவாக பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஆனால் இவைகளுக்கு டீஸல் என்ஜின் பொருத்த வேண்டுமென்றால் 16,000 ரூபாய்தான் ஆகும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சரவர்கள் கூட குறிப்பிட்டார்கள். இதைச் செய்தால் மிக்க நலமாக இருக்கும். ஆரம்ப மூலதனம் கூட அதிகமாக இருக்ாது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, ஆகவே இதைச் செய்ய அரசு முன்வருமா என்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் தயவு செய்து சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டும் அவர்கள் ஒரு கேள்வி கேட்கிற நேரத்தில், மூன்று கேள்விகள் கேட்டிருக்கலாம். அவர்கள் சுருக்கமாக கேட்க வேண்டும்.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, கேள்வி எண்ணிக்கை எவ்வளவு என்பது முக்கியமல்ல. அதன் கருத்துத்தான் முக்கியம். அது நாட்டுக்கு நன்மை பயக்கும் என்ற காரணத்தினால்தான் சொல்கிறேன். டீசல் உபயோகிப்பது மிகச் சிக்கனமாக இருக்கும். ஆகவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் மாண்புமிகு முதலமைச்சருடன் கலந்து ஆலோசித்து இதை உடனடியாகச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இதற்கு முன்னால் கொடுக்கப்பட்ட ஜீப்புகளில் இனிமேல் அந்த டீசல் இயந்திரத்தைப் பொருத்துவது என்பது இயலாது. ஆனால் சாலைப் போக்குவரத்து ஓரளவு சரியாக இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களில் புதிதாக வாகனங்கள் வழங்கப்படக்கூடிய நேரங்களில் இனிமேல் டீசல் என்ஜின் பொருத்தப்பட்ட ஸ்டாண்டர்டு வேன்களைக் கொடுக்கலாம் என்று அரசு கருதுகின்றது.

1978 மார்ச் 11]

**திரு. சி. ராமநாதன் :** தலைவரவர்களே, இப்போது ஓடும் இந்த ஜீப்பிலேயே இந்த டீசல் என்ஜின்களைப் பொருத்தலாம் என்று சொல்கிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா? தெரிந்தால் ஏன் ஆவன செய்யக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அத்தகைய செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, உள்ளாட்சித் துறைகளுக்கு இனிமேல் வழங்கும்போது ஸ்டாண்டர்டு 120 வாகனங்கள் வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். அந்த வாகனங்கள் விலை 57 ஆயிரம் ரூபாயாக இருக்கிறது. ஆனால் ஏற்கனவே உள்ள ஜீப்புகளுக்குப் புதிதாக டீசல் என்ஜின் பொருத்த வேண்டுமென்றால் 16 ஆயிரம் அல்லது 18 ஆயிரம் ரூபாய்தான் ஆகும். ஆகவே பொருளாதாரத்தைப் பொறுத்து பழைய வண்டிகளிலேயே டீசல் என்ஜினைப் பொருத்துவதற்கு அரசு முற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, அத்தனை ஜீப்புகளுக்கும் இயந்திரங்களை மாற்றி அமைப்பது என்பது அவ்வளவு சிக்கனமாக இருக்காது. ஓரளவு சாலைப் போக்குவரத்து சரியாக இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாத்திரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையைப் பெற்று அத்தகைய வான்களை வழங்கலாம் என்று அரசு கருதுகிறது.

(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுபற்றிய துணைக் கேள்விகளுக்கு அமைச்சர் மொத்தத்தில் அருமையாக பதில் சொல்லிவிட்டார்கள். ஆகவே தயவு செய்து நீங்கள் உட்காருங்கள்.

**திரு ரெ. வீ. சவுந்திரராஜன் :** மாண்புமிகு உறுப்பினர் எவ்வளவு பெட்ரோல் வேண்டுமானாலும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பது சரியல்ல. இவ்வளவுதான் ஒரு மாதத்தில் உபயோகிக்க வேண்டுமென்ற லிமிட் . . .

(விடை இல்லை.)